www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

மார்கழி 95
19.12.95

கிண்ணம் 6 எண்ணம் 8



## சிறுவர் இலக்கிய மாதசஞ்சிகை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொம்மைகள்

பலவிதமான பொம்மைகளை நீங்கள் காண்கின்றீர்கள். சிலர் வைத்தும் இருப்பீர்கள். துணிகளால் உருவாக்கிய பொம்மைகள், மரப் பொம்மைகள், பிளாஸ்ரிக் பொம்மைகள் எனப் பலவிதமான பொம்மைகளை நாங்கள் காணுகின்றோம். இவைகள் பலவிதம் என்பது ஒருபுறம் இருக்க, இந்தப் பொம்மைகளின் வரலாற்றைப் பற்றி சிறிது அறிந்து கொள்ளுவோம்.

பொதுவாக எல்லா நாட்டிலுமே பொம்மைகள் இருந்திருக்கின்றன. எங்கள் நாடான இலங்கை, இந்தியா சீனா போன்ற நாடுகளில் தொடக்க காலத்தில் மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகளைக் குழந்தைகளுக்கு விளையாடக் கொடுத்தனர். மரத்தாலேயே ஆண், பெண், மிருகங்கள், பறவைகள், போன்ற பொம்மைகள் சிறியவைகளாகச்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்து வர்ணம் தீட்டி பிள்ளைகள் விளையாடுவதற்காகப் பயன்படுத்தினார்கள். இவைகள் "மரப்பாச்சிப் பாவைகள்" என்று அழைக்கப் பட்டன.

எகிப்து நாட்டில் பிள்ளைகள் விளையாடுவதற்காக ஏராளமான பொம்மைகளைச் செய்தனர். எகிப்தின் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் பல வர்ணம் தீட்டிய மரப்பொம்மைகளைக் கண்டெடுத்திருக்கிறார்கள். கை கால்களை அசைக்கும் வகையிலும் மரப்பொம்மைகளை இங்கு பாவித்திருக்கிறார்கள். சிதைந்த கட்டட இடிபாடுகளில் இப்பொம்மைகள் கிடைத்திருக்கின்றன.

புராதன நாகரீகத்தைக் கொண்ட கிரேக்கர்கள், ரோமர்கள் நூலினால் இணைத்து அசையும் தன்மையில் பொம்மைகளை உருவாக்கினர். (இவ்விரு நாடுகளும் தற்போதைய கிறீஸ், இத்தாலி நாடுகளாகும்.) பம்பரங்கள், குதிரைகள், மேசைகள், குழந்தைப் பொம்மைகள் போன்றவைகள் பெண் குழந்தைகள் விளையாடுவதற்காகச் செய்யப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பொம்மைகளை குழந்தைகள் பெரியவர்களாகித் திருமணம் செய்து கொள்ளும் வேளையில் பெண் தேவதைகளுக்குக் காணிக்கையாகக் கொடுப்பார்கள். பழைய கிரேக்க, ரோமர்களின் குறிப்புக்களில் இவை கூறப்பட்டிருக்கின்றன.

மத்திய காலத்தில் மன்னர் குலக்குழந்தைகள், பிரபுக்களின் குழந்தைகள் விளையாடுவதற்கு கவசம் அணிந்த போர்வீரன் குதிரை மேல் ஏறி இருப்பதைப் போலப் பொம்மைகள் செய்தனர். இப்பொம்மைப் போர்வீரர்களை கயிற்றில் கட்டி இழுத்துச் சென்று குழந்தைகள் விளையாடி இருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில் ஜேர்மனி நாட்டின் பொம்மைக் கலைஞர்கள் புதுவிதமான பொம்மைகளைச் செய்தனர். மரங்களின் உள்ளே குடைந்து சீராக்கி தலை, கைகளை அசைக்கும்படி, "பப்பெட்ஸ்" (Puppets) பொம்மைகள் செய்தனர்.

தலையை மட்டும் மரத்தாலும் . உடல், கைகளைத் துணியாலும் செய்து மரத்தூள் அல்லது பஞ்சு, துணிகளை

www.tamilarangam.net

உள்ளே வைத்தும் பொம்மைகள் செய்தனர். இங்கிலாந்தில் விக்டோரியா மகாராணியின் ஆட்சிக் காலத்தில் இன்னும் விசேட முறை ஏற்பட்டது. குழந்தைகள் உண்ணும் இனிப்பு வகைகள், கேக் வகைகள் போன்றவைகள் பொம்மை வடிவில் செய்யப்பட்டன. இவை குழந்தைகளால் வரவேற்கப்பட்டன.

பொம்மைகளுக்கு விதவிதமான ஆடைகளை அணிவிக்கும் முறை இக்காலத்தில் உண்டானது. இவ்விஷயத்தில் பரிஸ் நகரம் முன்னணி வகித்தது. அக்காலத்தில் (19ம் நூற்றாண்டு) பரிஸ் நகரத்து பெண்கள் அணிந்த நாகரீக ஆடைகள் பொம்மைகளுக்கு அணிவிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. இதனால் மற்றநாடுகளில் தன் நாகரீகத்தைப் பரப்பப் பொம்மைகளைப் பயன்படுத்தியது. 18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தும் பிரான்ஸ் நாடும் சண்டையிட்ட வேளையிலும் பொம்மைகள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

17,18ம் நூற்றாண்டுக் காலப் பொம்மைகள் அழகான சின்னப் பெண்களைப் போலச் செய்யப் பட்டன. அழகான நீண்ட கவுண்கள் பொம்மைகளுக்கு அணிவித்தனர். பொம்மைகளுக்குக் கால்கள் அக்காலத்தில் வைக்கப்படவில்லை. நீண்ட கவுணில் பொம்மையின் கீழ்ப் பாகம் தெரியாது. பின் தற்காலப் பொம்மைகள் உருவாகின. பிளாஸ்ரிக் இறப்பர் கண்டு பிடிப்புகள் விதவிதமான, பலரகப் பொம்மைகள் உண்டாவதற்கு வழி செய்தன.

இன்று நான் எத்தனை விதமான பொம்மைகளைக் காணுகின்றோம். அழும் பொம்மை, பேசும்பொம்மை, நடக்கும் பொம்மை கார், வீடுகள் என எத்தனை முன்னேற்றம் பொம்மையின் உலகிலே.......

> ஒழுக்கம் என்பது போர்க்குணம் போன்றது. ஒழுக்கமாக வாழவேண்டுமெனில் ஓயாமல் மனத்தோடு போராட வேண்டியுள்ளது.
> ~ரூஸோ~



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நல்ல பொழுது போக்கு



குமரன் என்னும் ஏழைச் சிறுவன் இருந்தான். அவன் படிப்பில் கெட்டிக்காரனாக இருந்தான். கல்லூரி விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினான். இது மற்றச் சிறுவர்களுக்குப் பொறாமையாக இருந்தது. அவனை வெற்றி பெற முடியாமல் கவலைப் பட்டனர்.

www.tamilarangam.net

கல்லூரி விட்டதும் குமரன் வீட்டுக்குச் சென்று விடுவான். எங்கேயாவது மாலை நேர வகுப்புக்குச் செல்லுகிறான் என்று அவன் நண்பர்கள் நினைத்தனர். சிறிது நேரம் சேர்ந்து விளையாட அவர்கள் கூப்பிட்டால் கூடக் குமரன் ஒப்புக்கொள்ள மாட்டான். படம் பார்ப்பதற்கோ, அல்லது வேறு களியாட்டங்களுக்கோ அவர்கள் தாங்கள் அழைத்துச் செல்கிறோம் என்று கூறினாலும் ஒப்புக் கொள்ள மாட்டான் இது நண்பர்களுக்குக் கோபமாக இருந்தது.

அன்று சனிக்கிழமை. கல்லூரி விடுமுறை. இன்றாவது எங்கேயாவது சென்று வரலாம். வா என்று நெருங்கிப் பழகும் நண்பனான கண்ணன் கேட்டான். தனக்கு வேறு வேலையிருப்பதாகக் கூறி விட்டான் குமரன். இவனென்ன வீட்டிலேயே இருக்காமல் படித்துக் கொள்கிறானா? அவனுடைய குடும்பம் தான் ஏழைக் குடும்பமாயிற்றே! என்று நண்பர்கள் நினைத்தனர். அவனைச் சோதித்துப் பார்க்கவும் எண்ணினார்கள்.

அவனுக்குத் தெரியாமலே அவனுக்குப் பின்னால் சென்றனர். வீட்டுக்குச் சென்ற குமரன் நோயாளியான தாயாருக்கு உதவி செய்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீட்டைத் துப்பரவு செய்தான். உடுப்புகளைத் துவைத்துக் கொடுத்தான். கடைக்குச் சென்று சாமான்கள் வாங்கி வந்தான். பின் சகோதரர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தான். இவைகளை எல்லாம் செய்து கொண்டு குமரன் எப்படி வகுப்பிலும் கெட்டிக்காரனாக இருக்கிறான் என்று நண்பர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவனிடமே கேட்டு விட எண்ணினார்கள். திங்கள்கிழமை வந்தது. கண்ணனனும் மற்றச் சினேகிதர்களும் அவனிடம் கேட்டனர். குமரன் அவர்களைப் பார்த்து " அப்பாவின் சம்பளம் எங்கள் குடும்பத்திற்குக் போதாது என்பது உங்களுக்குத் தெரியுமே! அப்பா வேலை விட்டு வரும்போது பொம்மை தைக்கும் கடையில் இருந்து துணிகள் வாங்கி வருவார். நானும், தங்கை மீனாவும் சேர்ந்து பொம்மைகள் செய்வோம். அந்த வருமானத்தில் தான் குடும்பம் வாழ்கிறது. அப்பாவின் சம்பளம் வீட்டுவாடகைக்கும், அம்மாவின் வைத்தியத்துக்குமே போதுமானது. அதனால்தான் நீங்கள் கூப்பிடும் போதெல்லாம் மறுத்து விடுகிறேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

நண்பர்கள் கண் கலங்கினார்கள். ஆனாலும் கண்ணன் குமரனைப் பார்த்து "கேட்கிறேன் என்று குறை நினைக்காதே. எப்படிப் படிக்கிறாய்?" என்று கேட்டான். வகுப்பில் படிப்பதை வீட்டுக்குச் சென்றதும் படித்து விடுகிறேன். வகுப்பில் தரும் வீட்டு வேலைகளையும் வீட்டுக்குப் போனவுடன் செய்து விடுகிறேன். இறக்கையாகவே படிப்பில் கெட்டிக்காரனாக இருப்பதால் முதல் மாணவனாக இருக்கிறேன். பொழுதுபோக்குகளில் கவனத்தைச் செலுத்தாமல் படிப்பில் கவனத்தைச் செலுத்தினால் நீங்களும் கெட்டிக்காரராக இருக்கலாம் அல்லவா?" என்றான்.

நண்பர்களும் உண்மையை உணர்ந்தனர். வீணாக பொழுதைக் கழிக்காமல் நேரம் கிடைக்கும் வேளையில் குமரனுக்குப் பொம்மைகள் செய்வதற்கு உதவினர். ஒன்றாகச் சேர்ந்து படித்து வந்தனர். கல்லூரியிலும் கெட்டிக்காரர் என்று பெயரெடுத்தார்கள். வீணான பொழுதுகளை நீங்களும் வாழ்க்கைக்குத் தேவையான பொழுதுபோக்காகக் கொள்ளலாம் அல்லவா?

www.tamilarangam.net

# சட்டை போட்ட ஒட்டைச் சிவிங்கி



ஒட்டைச் சிவிங்கி ஒன்றுக்குச்
சட்டை போட்டுப் பார்க்கவே
எட்டுக் குரங்கு கூடின.
என்ன என்ன செய்தன?

ஒரு குரங்கு பாய்ந்து பாய்ந்தே
ஓடிச் சென்றது.

ஊருக்குள்ளே துணிக்கடைக்குள்
புகுந்து விட்டது.

பூக்கள் போட்ட பட்டுத்துணியை
அள்ளிக் கொண்டது.
பிடிக்க வந்தால் 'உர்உர்' என்று
கடிக்க வந்தது.

www.tamilarangam.net

வேல மரத்தில் ஒரு குரங்கு
ஏறிக் கொண்டது.
வேண்டுமட்டும் முள்ளையெல்லாம்
திரட்டி வந்தது.

காலின் அருகே நாலு குரங்கு
நின்று கொண்டன.
கர்ணம் போட்டு இரண்டு குரங்கு
முதுகில் ஏறின.

ஒட்டைச்சிவிங்கி உடம்பில் துணியைப்
போர்த்தி விட்டன.
ஒழுங்கு பார்த்து மிதித்துணியைக்
கடித்துக் கிழித்தன.

அந்தத் துணியில் சமமாய் ஐந்து
பங்கு போட்டன.
அவற்றில் நான்கை நான்கு, காலில்
நன்கு சுற்றின.

மிதம் உள்ள துண்டுத் துணியால்
கழுத்தை மூடின.
விரைந்து கூடி எட்டுக் குரங்கும்
வேலை செய்தன.

ஓரம் முழுதும் முட்க ளாலே
பொருத்தி விட்டுன.
உடனே எட்டுக் குரங்கும் எதிரே
வந்து நின்றன.

'ஓஹோ! ஓஹோ!' என்றே அவைகள்
குதிக்க லாயின.
உடுப்புப் போட்டு சிவிங்கி யாரைப்
பார்த்து மகிழ்ந்தன!

பார்த்து பார்த்து மகிழ்ச்சி யாலே
துள்ளிக் குதித்தன!
பாய்ந்து சென்று சிவிங்கி முதுகில்
ஏறிக் கொண்டன.

எட்டுக் குரங்கை முதுகில் ஏற்றிக்
கொண்ட சிவிங்கியும்
இன்ப மாகக் காடு முழுதும்
சுற்றி வந்தது.

ஒட்டைச் சிவிங்கி சட்டை போட்டு
எட்டுக் குரங்குடன்
வெற்றி பெற்ற வீரன் போலச்
சுற்றி வந்ததை,

மற்ற மிருகம் யாவும் பார்த்து
மகிழ்ச்சி கொண்டன.
மரத்தி லிருந்த பறவை யெல்லாம்
வியப்புக் கொண்டன.

—அழ. வள்ளியப்பா—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வினா விடைப் போட்டி முடிவுகள்

1. வறுமைப் பிடியில் திண்டாடும் கறுப்பு இன மக்களின் தேசம் எது?
எருது, பந்தி, பரோபகாரம், காப்பு, தும்பிக்கை, அப்பியாசம். (**எதிரோப்பியா**)

2. பதினெட்டாம் நூற்றாண்டில் முழு இலங்கையும் இவர்களிடம் தான். அவர்கள் யார்?
ஆசை, சங்கு, கிண்ணம், இலேசு, வயது, பெயர். (**ஆங்கிலேயர்**)

3. சிதறியிருந்த பல இராச்சியங்களை ஒற்றுமைப் படுத்தி ஜேர்மனியை ஒரே சாம்ராச்சியமாக்கியவர் யார்?
பிணைப்பு, அஸ்தி, காளைமாடு, ஊர்கோலம், பக்குவம். (**பிஸ்மார்க்**)

4. மூக்குக் கண்ணாடியை முதலில் கண்டு பிடித்தவர். இவர் ஞாபகமாக ஒரு நகரத்தின் பெயரும் உள்ளது. பெயர் என்ன?
வெள்ளை, இனிப்பு, பரஸ்பரம். (**வெனிஸ்**)

5. பொருளாதாரத்தில் கரும்புப் பயிர்ச் செய்கையை நம்பியிருக்கும் நாடு எது?
மொட்டு, பரிவட்டம், ரிஷிபத்தினி, ஆச்சரியம், ஆஸ்தி. (**மொரிஷியஸ்**)

www.tamilarangam.net

# எழுதியவர்கள்..

| | |
|---|---|
| 1. முகுந்தன் மகேந்திரன | BERG:GLADBACH |
| 2. லாவண்யா பாலேந்திரன். | MEERBUSCH |
| 3. பிரகாஸ் கந்தவனம் | NORWAY |
| 4. ராகுலன்.G | DENMARK |
| 5. சுகீவன் சண்முகலிங்கம் | CLAUSTHAL |
| 6. நிரோஷினி ஹரிச்சந்திரன் | WILDEMANN |
| 7. சுஜீனா சண்முகலிங்கம் | CLAUSTHAL |
| 8. மைதிலி மாசிலா | SAARBRUCKEN |
| 9. கிரிசாந் மனோரஞ்சிதராஜா | MÜNSTER |
| 10. ஜெயசாந் மனோரஞ்சிதராஜா | MÜNSTER |
| 11. மோகன் இரத்தினசபாபதி | ESCHELBRONN |
| 12. ஜெயதீபா இரத்தினசபாபதி | ESCHELBRONN |

இன்பத்தை எண்ணலாம். விரும்பலாம். அடையலாம். ஆனால் விலைக்கு வாங்க முடியாது.
~கிளைன் எலினா~

நமக்குத் தேவையானதை எல்லாம் கடவுளிடம் கேட்கலாம். ஆனால் வேண்டுவதற்கெல்லாம் கேட்கக்கூடாது. நாம் கவனமாக , கடினமாக உழைப்பது மிக அவசியம்.
~ஜெரிமிடெயிலர்.~

www.tamilarangam.net

# செய் நன்றி



கலா பெரிய பணக்கார வீட்டுப் பெண். அவள் அப்பா அரசாங்கத்தில் பெரிய பதவியில் இருந்தார். அதனால் அவள் குடும்பம் மிகவும் வசதியானதாக இருந்தது. கல்லூரியிலும் கலா திறமையாகப் படித்து வந்தாள். தமயந்தி என்ற ஏழைச் சிறுமியும் அவளோடு படித்தாள். தமயந்தியும் நன்றாகப் படிப்பாள். இருவருக்குமே

www.tamilarangam.net

படிப்பில் போட்டி தான். இதனால் கலாவுக்கு தமயந்தியைப் பிடிப்பதில்லை.

தன் சிநேகிதிகளுடன் சேர்ந்து தமயந்தியைக் கேலி செய்வாள். தமயந்தியின் கிழிந்த உடையைப் பார்த்து "எங்கள் வீட்டு வேலைக்காரரின் மகள் கூட இப்படிக் கேவலமான உடுப்புப் போடுவதில்லை. இப்படிப் பள்ளிக்கூடத்துக்கு வருவதைவிட வீட்டில் இருக்கலாம்" என்று அவமானப் படுத்துவாள். தன் ஏழ்மை நிலையை எண்ணி தமயந்தி கவலைப் படுவாளேயொழிய எதுவும் பேச மாட்டாள்.

ஒருநாள் நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. தமயந்தி தன்னிடம் இருந்த ஒரேஒரு உடையைத் துவைத்துப் போட்டிருந்தாள். வீட்டுக்குப் போட்டிருந்த உடையோடு மழையை' வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். தெருவில் திடீரென்று சத்தம் கேட்டு ஓடிச் சென்று பார்த்தாள். காரொன்று ஆலமரத்தில் மோதியிருந்தது. காரின் கதவு திறந்து உள்ளேயிருந்த சிறுமி வெளியே தெரிந்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரோட்டியோ பயத்தாலும் குளிரினாலும் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தான். "ஐயையோ! கலா" என்று கத்தியவாறே தமயந்தி ஓடிச் சென்று தந்தையை அழைத்து வந்தாள். தந்தையாரும் அருகில் இருந்த மற்றவர்களும் வைத்தியசாலையில் கலாவைச் சேர்த்தார்கள். வைத்தியசாலையில் தமயந்தி முன்வந்து தன் இரத்தத்தைத் தானம் செய்து இறக்கவிருந்த கலாவைக் காப்பாற்றினாள்.

சிலநாட்களின் பின் கல்லூரியின் ஆண்டு விழா நடந்தது. வகுப்பில் முதல் மாணவியான தமயந்திக்கு கல்லூரி அதிபர் பரிசு கொடுத்துக் கொண்டிருந்தார். கலா வைத்தியசாலையில் இருந்தபடியால் பரீட்சையில் கலந்து கொள்ளவில்லையானாலும், ஆண்டுவிழாவுக்கு வந்திருந்தாள். அந்தவேளையில் கலாவும் அங்கு சென்றாள். தான் கொண்டு வந்திருந்த பாசலொன்றையும் பரிசாகக் கொடுத்தாள்.

பின் விழாவுக்கு வந்திருந்தவர்களிடம் தான் தமயந்தியைக் கேவலமாகக் கூறி எத்தனையோ தடவை அவமானப்பட்ட போதும், தன் இரத்தத்தையே தானம் செய்து காப்பாற்றியதையும், அதற்குப் பிரதியுபகாரமாக தமயந்தியின் கல்லூரிப்

www.tamilarangam.net

படிப்புக்கான செலவுகளைத் தங்கள் தந்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தாள். ஏழ்மை நிலையிலும் தன் மகளை மனிதத்தன்மையோடு வைத்தியசாலையில் சேர்த்த தமயந்தியின் தந்தைக்கு கலாவின் தந்தையார் தன் காரியாலயத்திலேயே வேலை பெற்றுக் கொடுத்தார்.

அன்று முதல் கலாவும் தமயந்தியும் இணை பிரியாத சினேகிதிகளாக இருந்து வந்தனர்.

## நீர்ப்பரப்பில் வாழும் விலங்குகள்.


நிலப் பரப்பில் மனிதன், விலங்கு, பறவை, பூச்சி, புழு, ஊர்வன ஆகிய உயிர் இனங்கள் வாழ்கின்றன. அது போலவே நீர்ப்பரப்பிலும் பல்வகைப்பட்ட உயிரினங்கள் வாழ்கின்றன. மீன்களை விட விலங்குகளும் கடலில் வாழ்கின்றன. பாலூட்டிகளையே விலங்குகள் என்கிறார்கள். அவையாவன

திமிங்கிலம் (Wal)
சுறா (Hai)
திருக்கை (Rochen)
**Delphin**
**Robben**
**Walroß**
கடல் யானை (See-Elefant)
கடல் சிங்கம் (See l öwe)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கடல் நாய் (See hund)
கடல் கரடி (See bär)


(மேலே அடைப்புக்குறிக்குள் இருக்கும் பெயர்கள் யாவும் ஜேர்மன் மொழிப் பெயர்கள் ஆகும்.)

கடலில் வாழும் விலங்குகளில் மிகப் பெரியது திமிங்கிலம். ஆனால் அது விரும்பி உண்பதோ மிகச் சிறிய உயிரினங்களையே. அவற்றின் நீளம் ஆகக் கூடியது 6 சென்ரி மீற்றர் நீளமானதாகும்.

www.tamilarangam.net

பெரிய திமிங்கிலம் ஒரு நாளைக்கு 4,100 K.g உணவை தின்னுகின்றது.

Delphin யின் குட்டி பிறந்தவுடன் தனது முதல் சுவாசத்தை நீர் மட்டத்துக்கு மேலே தான் சுவாசிக்கிறது. குட்டி பிறந்தவுடன், தாய் நீருக்கு மட்டத்துக்கு குட்டியைத் தூக்கி வந்து தலையை நீருக்கு வெளியே உயர்த்துகிறது. அதன் பின்பு குட்டி சுவாசிக்க ஆரம்பிக்கின்றது. Delphin யின் மூக்குத் துவாரம் அதன் தலையின் நடுப்பகுதியில் உளது. இது போலவே திமிங்கிலக்குட்டிகளும் சுவாசிக்கின்றன.



- கபிலன் -

www.tamilarangam.net

# சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

| இ–வ | வ–இ | மே–கீ | கீ–மே |
|---|---|---|---|
| அம்பு | பகடை | அசுத்தம் | வலை |
| அம்புலி | ரதி | சுத்தம் | சுரம் |
| புலி | கதி | வேலை | பாட்டு |
| மது | அந்தி | பசி | சோதி |
| ஐயம் | மாலை | சம்மதம் | சசி |
| சித்தி | மரை | புத்தி | அடி |
| வானதி | கீறு | மதி | மாதம் |
| சட்டை | கூலி | கரடி | சனம் |
| பாம்பு | | துரோகம் | மத்தி |
| துயரம் | | ஐம்பது | மத்தியானம் |
| வதந்தி | | அட்டை | சதி |
| தந்தி | | மாறு | |
| தந்திரம் | | வாலி | |
| அல்லி | | தில்லானா | |
| சுகம் | | துரை | |
| ஈரம் | | துதி | |
| திதி | | | |
| அபிமானி | | | |
| சோலி | | | |
| கூற்று | | | |
| கீரை | | | |

www.tamilarangam.net

| | |
|---|---|
| 1. றுஷாணி நிமலகுமார். | SCHWEIZ |
| 2. கௌரியன் சிவானந்தராஜா | ELSDORF |
| 3. லக்ஸன் சிவானந்தராஜா | ELSDORF |
| 4. மோகன் இரத்தினசபாபதி | ESCHELBRONN |
| 5. ஜெயதீபா இரத்தினசபாபதி | ESCHELBRONN |
| 6. கிரிசாந் மனோரஞ்சிதராஜா | MÜNSTER |
| 7. ஜெயசாந் மனோரஞ்சிதராஜா | MÜNSTER |
| 8. சப்றீனா நோபேட் | ARNSBERG |
| 9. மைதிலி மாசிலா | SAARBRÜCKEN |
| 10. சுகீவன் சண்முகலிங்கம் | CLAUSTHAL |
| 11. சுஜீனா சண்முகலிங்கம் | CLAUSTHAL |
| 12. சுஜீவ் சண்முகலிங்கம். | CLAUSTHAL |
| 13. ராகுலன் | DENMARK |
| 14. பிரகாஸ் கந்தவனம் | NORWAY |
| 15. லாவண்யா பாலேந்திரன் | MEERBUSCH |
| 16. முகுந்தன் மகேந்திரன் | BERG. GLADBACH |
| 17. ஜெயானந்தன் கண்ணன் | BERG. GLADBACH |
| 18. நிரோஷினி ஹரிச்சந்திரன் | WILDEMANN |

எப்பொழுதும் முன் நோக்கியே செல்லுங்கள். முன்னேற்றத்தைப் பற்றியே சிந்தியுங்கள். இல்லையென்றால் பின்தங்கி விடுவீர்கள்.
~பெஞ்சமின் பிராங்க்ளின்~

இன்பங்கள் ஒருபோதும் சோடியாக வருவதில்லை. துன்பமோ ஒருபோதும் தனியாக வருவதில்லை.
~சீனப்பழமொழி~

www.tamilarangam.net

அதிசய மோதிரம்

ரமாவையும் சித்திராவையும் முனிவரின் அருகில் அழைத்துக் கொண்டு கௌதம் சென்றான்.

இவர்களைக் கண்டதும் அந்த முனிவர்: "என்ன கௌதமன்? இச் சிறுமியரை அழைத்து வருவதற்கு இவ்வளவு நேரமா? ஏன் நீ என்னைக் கண்டதை இவர்கள் நம்பவில்லையா? ஆம் இந்தக் கணனி யுகத்தில் முனிவர்களை நம்புவார்களா?"

"ஓம் தாத்தா இவர்கள் நம்பவேயில்லை, அதிலும் சித்திரா......" என்றவாறே சித்திராவின் பக்கம் திரும்பினான்.

"நான் இவரை பார்த்துவிட்டு வந்து உன்னிடம் சொல்லியிருந்தால், நீ மட்டும் என்னை நம்பியிருப்பாயா?" எனறு கோபித்துக் கொண்டாள் சித்திரா.

"சரி சரி இப்போது சண்டை போடாமல் என்னோடு வாருங்கள், உங்கள் அதிசயமோதிரத்தைப் பற்றி நான் சில விஷயங்கள் உங்களுக்குச் சொல்ல வேண்டும். அதற்கு முன் எனது வீட்டுக்குள் வாருங்கள்" என்றவாறே தமது வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போனார் அம்முனிவர். உள்ளே நுழைந்ததும் சிறார்களுடன் அம்முனிவரும் நிலத்தில் உட்கார்ந்து கொண்டார்.


"பல ஆண்டுகளுக்கு முன் விக்கிரமன் என்றொரு பத்து வயதுச் சிறுவனொருவன் உங்களது ஊரில் வாழ்ந்து வந்தான். அவனது தந்தை இறந்து விட்டார். அவனுக்கு மூன்று சகோதரர்கள் இருந்து வந்தார்கள். அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூவருடன் சிறுவனும் தந்தையார் விட்டுச் சென்ற வயலில் வேலை செய்து வந்தார்கள்.



ஒருமுறை அவனது தாய் கடும் வருத்தத்தினால் சாகக்கிடந்தார். வருத்தத்திற்கு மருந்து இக்காட்டினுள் இருந்த ஓர் மூலிகையே. ஆனால் சிறுவனின் சகோதரர்களோ காட்டுக்குச் செல்லப் பயந்தனர். காரணம் இங்கு வாழ்ந்து வந்த கொடிய மிருகங்களே. ஆனால் சிறுவன் பயப்படவில்லை. உடனேயே காட்டுக்குச் சென்றான். அங்கு அம்மூலிகையைக் கண்டு எடுத்தான். அப்போது ஓர் தேவதை அவன் முன் தோன்றி அவனைப் பாராட்டியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்பு அவனுக்கு உங்களது அதிசய மோதிரத்தையும் கொடுத்தது. அச்சிறுவன் நான்தான். இப்போது எனக்கு வயதாகி விட்டது. அதையினால் மோதிரத்திடம் கவலையாக இருக்கும் சிறுவனிடமோ சிறுமியிடமோ செல்லும்படி உத்தரவிட்டேன். அது உன்னிடம் வந்து சேர்ந்தது." என்று தனக்குத் தெரிந்த விஷயத்தை முனிவர் சொன்னார்.

"அதுசரி முனிவரே எங்களது பெயரும் வந்த நோக்கமும் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் கௌதம்.

"நான் உங்களிடம் மோதிரம் வந்து சேருவதற்கு முன்பு மாயக் கண்ணாடி ஒன்றைச் செய்து கொண்டேன். அதற்கு மோதிரத்தின் சக்தி சிலவற்றையும் எடுத்துக் கொண்டேன்" என்றார்.

"மாயக் கண்ணாடியா? அப்படியானால் நிலா எங்கு இருக்கின்றாள் என்பதைப் பார்க்க முடியுமா? முடிந்தால் இப்போதே பார்ப்போமா? இன்னும் ஐந்து நாட்களுக்குள் அவளைக் கண்டு பிடித்தே ஆக வேண்டுமல்லவா?" என்றாள் ரமா.

"நான் ஏற்கனவே பார்த்து விட்டேன் இங்கிருந்து சற்றுத் தொலைவில் ஒரு குகையுள்ளது அங்குதான் நிலாவை ஒளித்து வைத்திருக்கிறார்கள்" என்றார் முனிவர்.

"அப்படியானால் இப்போதே புறப்படுவோம்" என்றாள் சித்திரா.

கௌதமும் அவளை ஆமோதித்தான்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராஜராஜ சோழன்



இவர் பிற்காலச் சோழர்களில் சிறந்த மன்னராவார். கி.பி.985 முதல் 1014 வரை தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தை ஆட்சி செய்தார். வட இலங்கைப் பகுதியை வென்று தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். சேரநாடு, பாண்டியநாடுகளையும் வென்று தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். இதனால் "மும்முடிச்சோழன்" என்னும் பட்டம் பெற்றார்.

தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் ஆலயத்தைக் கட்டினார். இவர் காலத்திய ஆட்சி ஜனநாயகக்

www.tamilarangam.net

கொள்கையைக் கொண்டிருந்தது. குடவோலை முறையும், ஊர்ச்சபை முறையும் சிறந்து விளங்கியது. யுவராஜாவைத் தெரிவு செய்து அவரை நாட்டின் நிர்வாகப் பணிகளிலீடுபடச் செய்தார். இதனால் வாரிசு உரிமைப் போர் ஏற்படாது தடுத்தார். இந்து மதத்தைப் போற்றி வளர்த்தார். எனினும் "சூடாமணி விகாரம்" என்னும் புத்தமடாலயத்தை நிறுவுவதற்கு உதவினார்

இவருக்குப் பின் இவரது மகனான இராஜேந்திரச் சோழன் ஆட்சிக்கு வந்தார். கி.பி 1012 முதல் 1044 வரை ஆட்சி செய்தார். இலங்கை முழுவதையும் தமது ஆட்சிக்கு உட்படுத்தினார். இவர் "கங்கை கொண்ட சோழபுரம்" என்னும் நகரத்தையும், ஏரியையும் உருவாக்கினார். அந்தமான், நிக்கோபர் தீவுகளிலும் தமது ஆட்சியை நிலை நாட்டினார். சீன மன்னருடன் நட்புறவு கொண்டார். இவருக்குக் "கங்கை கொண்ட சோழன்" "உத்தமசோழன்" என்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

மூலம்: இராஜராஜசோழன்.

எழுதி அனுப்பியவர்: முகுந்தன் மகேந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ரொபின்



பாட்டி பாடிக் காட்டிய பாடலை முணுமுணுத்துக் கொண்டு கேசவன் யன்னல் அருகில் அமர்ந்திருந்தான். பக்கத்தில் உள்ள அப்பிள் மரத்தில் சத்தம் கேட்டது. கண்ணை நிமிர்த்திப் பார்த்தான். ரொபின் பறவை ஒன்று மரக்கிளையில் வந்து இருந்தது. பள்ளித் தோழனான ஜோர்ச் ரொபின் பறவையைப் பற்றிக் கதை சொல்லுவான். பூமிக்கு நெருப்பைக் கொண்டு வந்து ரொபின் பறவை கொடுத்ததாம். அதன்பின் தான் பூமிக்கு நெருப்புக் கிடைத்ததாம்.

ஐரோப்பா கண்டத்தில் வாழும் பறவைகளைப் பற்றித்தானே வகுப்பில் படிக்கிறோம். ஆசிரியரான மைக்கேலிடம் கேட்க வேண்டும். அடுத்த நாள் வகுப்பில் கேசவன் ஆசிரியரிடம் ரொபினைப் பற்றி ஜோர்ச் சொல்லியது உண்மை தானா என்று

www.tamilarangam.net

கேட்டான். ஆசிரியர் ரொபினைப் பற்றி உற்சாகத்துடன் சொல்ல ஆரம்பித்தார்.

ரொபின் பிரித்தானிய நாட்டு மக்களால் மிகவும் விரும்பப்படும் பறவையாகும். தேசியப் பறவை என்று அங்கீகரிக்கப் படாமல் இருந்த போதும் அப்பறவை மக்களால் கௌரவிக்கப்பட்ட பறவையாகவே இருக்கிறது. இப்பறவைக்கு யாருமே தீமை நினைப்பதில்லை. தெய்வத்தன்மை உள்ளதாக ரொபினை மக்கள் நம்புகிறார்கள். ரொபினைக் கொன்றாலோ, அதனுடைய முட்டையைக் களவெடுத்தாலோ, அதனைப் பிடித்துக் கூண்டிலடைத்தாலோ கஷ்டங்கள், துயர்கள் ஏற்படுமென்பது ஆங்கிலேயர்களின் நம்பிக்கை.

ரொபின் வீட்டுக்குள் நுழைந்து போனால் அந்த வீட்டில் பெரிய துன்பங்கள் வருமென்பதற்கான அடையாளம் ஆகும். இப்பறவையின் கூட்டைக் கலைத்தாலோ, இந்தப் பறவையைக் கையினால் பிடித்து வைத்திருந்தாலோ அவர்களுக்கு நடுக்கம் ஏற்படும். இவையெல்லாம் ஆங்கில மக்களிடம் இருக்கும் கற்பனைகள் தான். பிரித்தானிய பூர்வீக

www.tamilarangam.net

மக்கள் இதனைக் கடவுளாக வணங்கியதற்கு பல நாடோடிக்கதைகள் இருக்கின்றன.



மக்களின் துன்பங்களைப் போக்கியதாகவே ரொபின் பறவை சித்தரிக்கப் பட்டிருக்கின்றது. "கானகத்தில் குழந்தைகள்" என்ற குழந்தைகளுக்கான கதையில் குழந்தைகளின் குளிரைப் போக்க இலைகளினால் குழந்தைகளை மூடிப் பாதுகாப்பது ரொபின் பறவை தான். புகழ் பெற்ற நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியர் கூடத் தமது நாடகமொன்றில் ரொபின் பறவையைப் பெருமையாகக் கூறியிருக்கிறார்.

www.tamilarangam.net

ரொபின் பறவையின் நெஞ்சுப்பகுதி சிவப்பு நிறமாக இருக்கும். இதற்கும் கதைகள் உண்டு. மனிதனுக்கு நெருப்பைக் கொண்டு வரும்போது நெஞ்சை நெருப்புத் தாக்கி விட்டதாம். மனிதனின் தோழனாகவும், அபாயங்களை முன்பே அறிவிக்கும் பறவையாகவும், காலநிலைகளை தெரிவிக்கும் பறவையாகவும் சித்தரித்துப் பாடல்கள், கதைகள் உண்டு. மக்களின் துன்பங்களை மாற்றி, ஏழைகளுக்காக செல்வர்களின் சொத்துக்களைக் கைப்பற்றி ஏழைகளுக்கு உதவி செய்த "ரொபின்ஹூட்" என்ற வீரவாலிபனின் கதையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வாலிபனின் உண்மைப் பெயர் தெரியாது. ரொபின் என்னும்பெயரைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டதில் இருந்து ரொபினின் பெருமை தெரிகின்றதல்லவா?

இவ்வாறு ஆசிரியர் வகுப்பில் விரிவுரையே நடத்தி விட்டார்.

*பதினைந்தாம் நூற்றாண்டிலேயே சீன ஆராய்ச்சியாளர்கள் 11,095 பாகங்கள் அடங்கிய கலைக்களஞ்சியத்தைத் தொகுத்துச் சாதனை புரிந்திருக்கிறார்கள்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேன்கூடும் குரங்கும்



www.tamilarangam.net

ஒரு மரக் கொப்பில் தேன்கூடு ஒன்று இருந்தது. அதில் நிறையத் தேன் இருந்தது. அதை அந்த மரத்தில் இருந்த குரங்கு கண்டது. அது தேன் குடிக்க ஆசைப்பட்டது. அதனால் தேன்கூட்டுப் பக்கம் மெதுவாகப் போனது. கூட்டைப் பிய்த்து நசிக்கத் தொடங்கியது. உடனே அக்கூட்டில் இருந்த தேனீக்கள் குரங்கின் மீது பாய்ந்து கொட்டியது. குரங்கினால் தேனீக்கள் கொட்டிய விஷத்தைத் தாங்க முடியவில்லை. அது தேன் குடிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு ஓடி விட்டது.

எழுதியவர்

செல்வி நதீஜா அருட்குணராஜா
சூரிச், சுவிஸ்

வாழ்க்கையில் ஒரு கதவு மூடிக் கொண்டால் ஒரு கதவு தானாகவே திறந்து கொள்ளும். இது இயற்கையின் விதி. மூடிக் கொண்ட கதவைப் பற்றி எண்ணுகின்றோமேயொழிய திறந்த கதவை நாம் கண்டு கொள்வதில்லை.

www.tamilarangam.net

பிள்ளைகளே! நீங்கள் வாழும் நாட்டை வி
வேறு நாடுகளையும் பற்றி ஓரளவுக்
அறிந்திருத்தல் நல்லது என எண்ணுகின்றேன். அதனா
ஒவ்வொரு சிறுவர் அமுதத்திலும் ஒரு நாட்டைப் பற்
உங்களுக்கு படத்துடன் எழுதுகின்றேன். நாடுகளை
பற்றி எழுதும் போது அந்நாட்டு இனமக்களின் பெய
அவர்கள் பேசுகின்ற மொழிகளின் பெயர்க
நாணயங்களின் பெயர்கள் தமிழ் மொழியில் எழுதுவது
கடினமாக உளது. அத்துடன் சிறுவர் அமுதத்தை
ஜேர்மன் நாட்டுச் சிறுவர்கள் மட்டும் வாசிப்பவர்க
அல்ல. ஐரோப்பாவில் வாழும் எல்லாச் சிறுவர்களு
வாசித்துப்பதால் மேலே கூறப்பட்டுள்ள பெயர்களை
ஆங்கில மொழியில் எழுதுவது பொருத்தமாயிருக்கு
என எண்ணுகின்றேன். இந்நாடுகள் பற்றிய தகவல்க
யாவும் Webster's New Encyclopedic Dictionary (199
னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

## இலங்கை.

இலங்கை ஒரு தீவு. இந்து சமுத்திரத்தி
மத்தியில் இந்தியாவுக்கு தெற்கே அமைந்துள்ளது
இலங்கை 65,610 சதுர கிலோ மீற்றர் பரப்புடையது


இலங்கையின் அகலம் மேற்கே
கொழும்பிலிருந்து கிழக்கே சங்கமான்கந்தை முனை
வரை 225 கிலோ மீற்றர். இலங்கையின் நீளம் வடக்கே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பருத்தித்துறையிலிருந்து தெற்கே தொன்டிராமுனை வரை 435 கிலோ மீற்றர். இலங்கை வெப்ப வலயத்தில் அமைந்திருப்பதுடன், பருவக்காற்றுக் காற்றுக்களின் செல்வாக்குக்கு உட்பட்டது. வருடம் முழுவதும் சூரிய வெப்பத்தைப் பெறுகின்றது.




இலங்கை மத்தியில் மலைகளையும் சுற்றி வர பரந்த சமவெளியையும் கொண்டது. மத்தியில் ஐந்து உயரமான மலைகள் உள. மிக உயரமான மலை பிதுறுதாலகால மலையாகும். இதன் உயரம் 2,514 மீற்றர். மற்றையன சிவனொளிபாத மலை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோட்டப்பாலை, கிரிகாலபொத்தை, நமுனகுல ம
என்பன. மிகவும் நீளமான நதி மகாவலி கங்கை. இ
நீளம் 334 கிலோ மீற்றர். கிட்டத்தட்ட 15 நதி
பாய்கின்றன.

கி.பி. 1505 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை
மன்னர் ஆட்சியே நடைபெற்றது. கி.பி. 1505ல் இரு
1658 ஆண்ட வரை இலங்கையைப் போர்த்துக்
ஆட்சி செய்தனர்.

கி.பி. 1658 தொடக்கம் 1796 வரை ஒல்லா
இலங்கையை ஆட்சி செய்தார்கள். கி.பி. 1796 இருந்
1948 வரையும் பிரித்தானியார் ஆட்சி செய்தார்
இவர்களே இலங்கை முழுவதையும் கைப்ப
இலங்கை முழுவதையும் ஒரு ஆட்சியின் கீழ்
கொண்டு வந்தவர்கள். போர்த்துக்கீசரு
ஒல்லாந்தரும் இலங்கையின் மத்திய மலைநாட்
பிரதேசங்களைத்

தவிர, கரையோரப் பிரதேசங்களைக் கைப்ப
ஆட்சி செய்தார்கள். 1948 ஆம் ஆண்டுமாசி (Febru
மாதம் 04ந் திகதி சுதந்திரம் அடைந்தது. 1978 ஆண
வைகாசி(Mai) 28ந் திகதி இலங்கை குடியரசு ஆன
இலங்கையின் தலைநகரம் கொழும்பு. (
ஜெயவர்த்தனபுரம்).

இங்கு சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கி
ஆகிய இனங்கள் வாழ்கின்றன. மக்கள் இந்து சமய
பௌத்த சமயம், இஸ்லாம் சமயம், கத்தோலிக்க சமய
என்பவற்றைப் பின்பற்றுகின்றார்கள். மக்கள் பேசுகின்

www.tamilarangam.net

மொழிகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்பன.

இங்கு புழக்கத்தில் இருக்கும் பணத்தின் பெயர் ரூபா, சதம் ஆகும். இங்கு பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது நெல் ஆகும். அத்துடன் குரக்கன், தினை, சாமை, வரகு போன்ற தானிய வகைகளும், காய்கறி வகைகளும், பழவகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் மீன்பிடித்தல், முத்துக் குளித்தல் ஆகிய தொழில்களும் நடைபெறுகின்றன.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பயிர்களாக தேயிலை, இறபர், கோப்பி, கொக்கோ, என்பவற்றுடன் வாசனைத் திரவியங்களான ஏலம், கராம்பு, கறுவா, மிளகு என்பன பயிரிடப்படுகின்றன. வைரக்கல் அகழ்தல் ஆகிய தொழில், ஆடை தைத்தல் என்பனவும் வெளிநாடுகளுக்கே ஏற்றுமதி செய்வதற்காக நடைபெறுகின்றன.

## ஆப்கானிஸ்தான்.




ஆசியாக் கண்டத்தில் பாகிஸ்-தானுக்கும் ஈரானுக்கும் இடை-யில் இருக்கும் நாடு ஆப்கா-னிஸ்தானாகும். இந்நாடும் முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் நாடாகும். இந்நாட்டின் நிலப் பரப்பு 647,500 சதுர கிலோ மீற்றர் ஆகும். இதன் தலைநகரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காபுல். இங்கு அதிகளவு மக்கள் பின்பற்றும் சமயம் இஸ்லாம். இங்கு வாழும் மக்கள் பேசும் மொழிகள் Pashto, Persian என்பன. இந் நாட்டின் நாணயத்தின் பெயர் ஆப்கானி (Afghani) . தேர்தல் மூலமே பாராளுமன்றத்துக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

இங்கு இந்துக்குஷ் (5000–7000மீற்றர்) மலைத் தொடர்கள் இருக்கின்றன. இந் நாடு வரட்சியான வெப்பத்தையும், மழைவீழ்ச்சியையும் கொண்டது. இங்கு கோதுமை, பழவகைகள், பருப்பு வகைகள் என்பன பயிரிடப்படுகின்றன. பிரதான கைத்தொழில்களாக புடவைக் கைத்தொழில், தளபாடங்கள் உற்பத்தி, சீமெந்து உற்பத்தித் தொழில் என்பன நடைபெறுகின்றன

- நிர்மலா பரமசிவம் -

| |
|---|
| கடல் காற்றின் அலைகளினால் நிலப்பகுதிக்கு மழை கிடைக்கிறது. ஆனால் சில மலைத் தொடர்கள் மழை முகில்கள் செல்வதைத் தடுத்து விடுகின்றன. இதனால் மலைத்தொடரின் மறு பக்கத்துக்கு மழை கிடைப்பதில்லை. இவ்வாறு உருவானது தான் கிரேட் அமெரிக்கன் பாலைவனம். இதன ஒரு பகுதிக்கு மரணப் பள்ளத்தாக்கு என்று பெயர் வைத்திருக்கிறார்கள். |

www.tamilarangam.net

# தந்திரக் கணக்குகள்

1. ஒரு பெட்டிக்குள் வண்டுகளும் சிலந்திகளும் இருந்தன. அவைகளின் எண்ணிக்கை 8 பெட்டியிலுள்ள பூச்சிகளின் கால்கள் 54 அதற்குள் எத்தனை சிலந்திகள் இருக்கின்றன?.

2. 6 பெண்கள் 6 பெட்டிகளில் உடுப்புக்களை அடுக்க 6 நிமிடங்கள் செல்லுகின்றன. 60 பெட்டிகளில் 60 நிமிடங்களில் அடுக்க எத்தனை பெண்கள் தேவை?

விடைகள்:

வண்டுகளுக்கு எத்தனை கால்கள் என்பது உங்களுக்குத் தெரியும். சிலந்திக்கு எத்தனை கால்கள் என்பதும் தெரியும். உள்ளே பெட்டியுள் இருந்த வண்டுகளின் எண்ணிக்கை 5. சிலந்திகளின் எண்ணிக்கை 3. வண்டுகளின் கால்களின் எண்ணிக்கை 30. சிலந்திகளின் கால்களின் எண்ணிக்கை 24. எல்லாமாக 54 கால்கள்.

3 பெண்கள் 6 பெட்டிகளுள் 6 நிமிடத்தில் உடுப்பு அடுக்குகிறார்கள். 6 பெண்கள் ஒரு பெட்டியுள் ஒரு நிமிடத்தில் உடுப்பு அடுக்குவார்கள். 6 பெண்கள் 60 பெட்டிகளுள் 60 நிமிடத்தில் உடுப்பு அடுக்குவார்கள்.

www.tamilarangam.net

SIRUVAR AMUTHAM



ஈழம்
எங்கள்
நாடென்போம்!
இதற்கு
ஏது
ஈடென்போம்?

—சின்ன இராஜேஸ்வரன்—

புதிய முகவரி

Siruvar Amutham
Alet Str 11
50189 Elsdorf
Germany

CHILDREN LITERATURE MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்